www.Padasalai.Net www.Trbtnpsc.Com

HTM | அரையாண்டுத் தேர்வு - 2023 | காலம் : 3.00 மணி
11 - ஆம் வகுப்பு | பொருளியல் | மதிப்பெண்கள் : 90

பகுதி - I

I குறிப்பு i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 X 1 = 20

ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. இந்தியாவின் மருத்துவ தலைநகரம் என்று அழைக்கப்படுவது?
அ) மும்பை ஆ) டெல்லி இ) கொல்கத்தா ஈ) சென்னை

2. வெளியுறு செலவுகள் என்பது
அ) கையில் இருந்து செய்யும் செலவுகள் ஆ) உண்மை செலவுகள்
இ) சமூகச் செலவு ஈ) மூழ்கும் செலவுகள்

3. கடன் நிதி கோட்பாட்டின் படி கடன் நிதிகளின் அளிப்பு இதற்குச் சமம்
அ) S + BC + DH + DI ஆ) I + DS + DH + BM இ) S + DS + BM + DI ஈ) S + BM + DH + DS

4. மக்கள் தொகையில் 1921 ஆம் ஆண்டு ....................... என அழைக்கப்படுகிறது.
அ) சிறு பிளவு ஆண்டு ஆ) பெரும் பிரிவினை ஆண்டு
இ) மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு ஈ) நகர மயமாதல் வருடம்

5. எப்போது நிறுவனம் இலாபம் பெற முடியும்?
அ) TR < TC ஆ) TR - MC இ) TR > TC ஈ) TR = TC

6. $X^n$ என்பதன் வகையீடு ....................... .
அ) $nx^{n-1}$ ஆ) 0 இ) 1 ஈ) $nx^{n-1}$

7. இயற்கையின் கொடை தவிர்த்த வருமானம் அளிக்கக்கூடிய பிறவகை செல்வங்களே மூலதனம் என்பது யாருடைய கூற்று?
அ) சும்பீட்டர் ஆ) மார்ஷல் இ) வாக்கர் ஈ) ஆடம் ஸ்மித்

8. இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்ஜியமாக இருக்கும் போது மொத்த பயன்பாடு ................. இருக்கும்.
அ) குறைவாக ஆ) உச்சமாக இ) பூஜ்ஜியமாக ஈ) எதிர்மறையாக

9. நாடுகளின் செல்வம் மற்றும் காரணங்களை குறித்த ஒரு விசாரணை என்ற நூலின் ஆசிரியர் யார்?
அ) ஆல்பிரட் மார்ஷல் ஆ) ஆடம் ஸ்மித் இ) இலயன்ஸ் ராபின்ஸ் ஈ) பால். ஆ. சாமுவேல்சன்

10. ஜனநாயக சமதர்மத்தை கொண்டு வந்தவர்
அ) ஜவஹர்லால் நேரு ஆ) P.C. மஹலனோபிஸ் இ) டாக்டர் இராஜேந்திர பிரசாத் ஈ) இந்திரா காந்தி

11. இந்தியாவின் கள்ளிக்கோட்டைக்கு வாஸ்கோடகாமா வருகை புரிந்த வருடம்
அ) 1489 ஆ) 1948 இ) 1498 ஈ) 1849

12. இந்தியாவில் உள்ள ஊரகக் குடும்பங்களில் கடனாளிகளின் பங்கு எவ்வளவு?
அ) பாதி அளவு ஆ) நான்கில் ஒரு பங்கு இ) மூன்றில் இரண்டு பங்கு ஈ) நான்கில் மூன்று பங்கு

13. இந்தியாவில் முதல் சிறப்பு பொருளாதார மண்டலம் ஏற்படுத்தப்பட்ட இடம் எது?
அ) மும்பை ஆ) சென்னை இ) காண்ட்லா ஈ) கொச்சி

14. பகிர்வு கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) உற்பத்தி விலைக் கோட்பாடு ஆ) காரணி விலைக் கோட்பாடு
இ) கூலிக் கோட்பாடு ஈ) வட்டிக் கோட்பாடு

15. எந்த அங்காடியில் AR மற்றும் MR சமமாகும்?
அ) இருவர் முற்றுரிமை ஆ) நிறைவு போட்டி இ) முற்றுரிமை போட்டி ஈ) சில்லோர் முற்றுரிமை

16. ஒரு அலகு உற்பத்திக்கான செலவு ....................... செலவாகும்.
அ) சராசரி ஆ) இறுதிநிலை இ) மாறும் ஈ) மொத்த

17. எந்த காரணி சமுதாய மாற்றம் உருவாக்கும் முகவர் என்று அழைக்கப்படுகிறது?
அ) உழைப்பாளர் ஆ) நிலம் இ) தொழிலமைப்போர் ஈ) மூலதனம்



Dr V. Chinnadurai, PGT, Kadaladi (GHSS)

CamScanner

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

18. மிகை தேவை நெகிழ்ச்சி உள்ள தேவைக்கோட்டின் வடிவமானது ................... .

அ) படுகிடை ஆ) செங்குத்து இ) விரைந்து சரியும் ஈ) மெதுவாக சரியும்

19. பொது கருத்திலிருந்து தனிக்கருத்து பெறும் முறை? அ) பகுத்தாய்வு முறை

ஆ) தொகுத்தாய்வு முறை இ) இயல்புரை அறிவியல் ஈ) நெறியுரை அறிவியல்

20. வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதன் முக்கிய நோக்கம்

அ) தனியார் சமூகநலம் ஆ) வருவாய் ஈட்ட இ) சமூகநலம் ஈ) தொழில் முற்றுரிமை

## பகுதி - II

**II எவையேனும் 7 வினாக்களுக்கு விடை அளிக்கவும்.**

**வினா எண். 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7 X 2 = 14

21. பண்டங்களை பணிகளிலிருந்து வேறுபடுத்துக.
22. விலை தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி.
23. உற்பத்தியாளர் சமநிலை அடைய நிபந்தனை யாது?
24. மூழ்கும் செலவு என்றால் என்ன?
25. இடத்தின் அடிப்படையில் அங்காடியின் வகைகளை குறிப்பிடுக.
26. வட்டி பற்றி நீ அறிவது யாது?
27. தொழில்நுட்ப தெரிவு பற்றி சென் கூறுவது யாது?
28. சுதந்திரம் அடைவதற்கு முன் இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வகையான நில உடமை முறைகள் யாவை?
29. ஊரக வீட்டு வசதி பிரச்சனைக்கான காரணங்களில் இரண்டினை கூறுக.
30. மொத்த செலவு சார்பு $TC = 60 + 10x + 15x^2$ என்றால் சராசரி செலவு சார்பினை காண்க.

## பகுதி - III

**III எவையேனும் 7 வினாக்களுக்கு விடை அளிக்கவும்.**

**வினா எண். 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7 X 3 = 21

31. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
32. மொத்த சராசரி, இறுதிநிலை உற்பத்திகளுக்கு இடையே உள்ள தொடர்பினை விவரி.
33. நீண்டகால செலவு வளைகோட்டை தக்க வரைபடத்துடன் விளக்கு.
34. அங்காடியின் இயல்புகள் யாவை?
35. கூலியின் வகைகளை கூறுக.
36. ஆங்கிலேயர் காலத்தில் இந்திய கைவினைப் பொருட்கள் உற்பத்தி குறைந்தது ஏன்?
37. புதிய வர்த்தக கொள்கையின் சாராம்சத்தை விளக்குக.
38. SHG - ன் பண்புகளை கூறுக.
39. கிராமர் விதியை பயன்படுத்தி சமன்பாடுகளின் x மற்றும் y மதிப்புகளை காண்க. $x + 3y = 1$ மற்றும் $3x - 2y = 14$.
40. வாழ்நாள் எதிர்பார்ப்பு காலம் குறிப்பு வரைக.

## பகுதி - IV

**IV அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும்.** 7 X 5 = 35

41. அ) பொருளியலின் தன்மை மற்றும் எல்லையை விவரி. *(அல்லது)*

ஆ) ரிக்கார்டோவின் வார கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி.

42. அ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி. *(அல்லது)*

ஆ) இந்திய பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி.

43. அ) விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக. *(அல்லது)*

ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.

44. அ) பல்வேறுபட்ட விலை நிலைகள் AR மற்றும் MR கோடுகளுக்கு இடையேயான தொடர்பை விளக்குக. *(அல்லது)*

ஆ) 2015-2020 ம் ஆண்டிற்கான ஏற்றுமதி - இறக்குமதி கொள்கையின் சிறப்பு இயல்புகளை விளக்குக.

45. அ) நிறைவு போட்டியின் இயல்புகளை விளக்குக. *(அல்லது)*

ஆ) ஊரக கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.

46. அ) சம இறுதிநிலை பயன்பாட்டு விதியை விளக்குக. *(அல்லது)*

ஆ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக.

47. அ) பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன? *(அல்லது)*

ஆ) மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி.



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com